[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 நவம்பர் 14

தற்கு முடிந்தால் அங்குவ ருகிறேன்என்று சொன்னார்கள்; இல்லாவிட்டால் சில பல நாட்கள் கழித்து கட்டாயம் வருகிறேன் என்று திரு. ராஜீவ் காந்தி அவர்களும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். விரைவிலே அவர்கள் வருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அவர்கள் வந்து பண்டித ஜவஹர்லால் நேருவினுடைய திருவுருவச் சிலையை திறந்து வைக்க வேண்டுமென்பது தான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெரும் விருப்பமும் ஆகும். அந்தச் சிறப்புக்கு உரிய நிகழ்ச்சி இன்றே நடந்திருக்குமேயானால், மிக மிக பொருத்தமாக இருந்திருக்கும் என்று தான் முதல்வர் அவர்களும் விரும்பினார்கள். என்றாலும் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சி நடைபெறுவது நமக்கெல்லாம் பெருமிதத்தை அளிக்கின்ற ஒன்றாக அமையும் என்று சொல்லி, இந்த அவையின் சார்பாக, இந்த அவையில் இருக்கின்ற அத்தனைக் கட்சிகளின் தலைவர்கள் சார்பாக, அத்தனைக் கட்சி உறுப்பினர்கள் சார்பாக, பொதுவாக தமிழக மக்களின் சார்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சார்பாக, பண்டித ஜவஹ்ர்லால் நேருவுக்கு அஞ்சலி செலுத்துவதோடு, அவருடைய புகழும், பெருமையும் என்றென்றும் நிலையாக நின்று நமக்கு வழிகாட்டியாக அமைய வேண்டுமென கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும், உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும் என்னுடைய அஞ்சலியையும் அவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

** ** *

3. உரிமைப் பிரச்சினை

மின் வாரியத் தலைவர் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. சிந்தன் அவர்கள் தமிழ்நாடு மின் வாரியம் தனது ஊழியர்களுக்கு அனுப்பிய ஒரு சுற்றறிக்கையில், மின் வாரிய ஊழியர்கள் அவர்கள் குறைகள் குறித்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் பாராளுமன்றத்திலோ அல்லது பேரவையிலோ வினாக்கள் மூலமாகவோ அல்லது விவாதம் மூலமாகவோ தங்க

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1986 நவம்பர் 14] [பேரவைத் தலைவர்]

ளுடைய பிரச்சினைகளை அல்லது குறைகளை எழுப்பக் கூடாது என்றும் அவ்விதம் எழுப்பினால் அது மின் வாரியத்தின் ஆணைக்குப் புறம்பானது என்றும் தெரிவித்துள்ளதால் அவ்வாறு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை பேரவை உறுப்பினர்களுடைய உரிமையையும், கௌரவத்தையும் பாதிப்பதாக உள்ளது என்று ஒரு அவை உரிமைப் பிரச்சினை குறித்து அறிவிப்பு கொடுத்துள்ளார். இது எவ்விதம் அவை உரிமை மீறிய பிரச்சினைகளில் அடங்கும் என்பது குறித்து உறுப்பினர் அவர்கள் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.20)

** ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதி பெறாமல் பேசிய அத்தனையும் அவைக் குறிப்பில் இருக்காது. மாண்புமிகு திரு. என். எஸ். வி. சித்தன் தெரிவித்த அஞ்சலியும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசிய அந்தக் கருத்துக்களும் அதையொட்டிய என்னுடைய கருத்துக்களும்தான் அவைக் குறிப்பில் இருக்கும். வேறு யார் பேசியதும் இருக்காது. நான் அனுமதி வழங்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் அமருங்கள்.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை நான் உங்கள் முன்னால் எழுப்பியிருக்கிறேன், தமிழ்நாடு மின் வாரியத் தலைவர் 20–9–1986 அன்று ஊழியர்களுக்கு என வெளியிட்டிருக்கக் கூடிய ஒரு சுற்றறிக்கையில்

"When M.L.As., M.L.Cs., M.Ps. and other non-officials make representations on behalf of individual employees to Ministers ...."

எம்.எல்.ஏ க்கள். எம்.பி க்கள் அல்லது எம்.எல்.சி க்கள் அதிகாரிகளிடமோ அல்லது மற்றவர்களிடமோ, தொழிலாளிகளின், ஊழியர்களின் சார்பாக, சில முறையீடுகளை வைக்கும்போது, என்று குறிப்பிட்டு, அதற்குப் பிறகு,

"an interpellation in Parliament or in the State Legislature shall be deemed to have contravened the above order ...."

அவ்வாறு அமைச்சர்களிடம் நேரில் பேசும்போதும், நேரில் முறையிடும்போதும் அதே முறையில் ஏதேனும் பாராளுமன்றத்திலோ, சட்டமன்றத்திலோ ஒரு கேள்வி எழுப்பப்படுமேயானால் அந்தக் கேள்விக்கு அந்தக் குறிப்பிட்ட நபர் உதவி செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த உத்தரவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. வி. பி. சிந்தன்] [1986 நவம்பர் 14

அந்த உத்தரவை எல்லா அதிகாரிகளும் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்றும்,

" .... Violation of the above orders by the employees will be viewed seriously and disciplinary action shall be initiated against such employees "

அந்த ஊழியர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைஎடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த மன்றத்தினுடைய உரிமையைப் பற்றி அதிகமாக நான் விளக்கத் தேவையில்லை. ஜனநாயக நாடுகளில் பாராளுமன்றத் திற்கும், சட்டமன்றத்திற்கும் உள்ள உரிமைகள் தாங்கள் அறிந்ததே. அந்த வகையில், உறுப்பினர்களுக்குச் சில பொறுப்பு கள் உண்டு. அரசியல் சட்டத்திலும் வழங்கப்பட்டிருக்கிற பொறுப்புக்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அவ்வப்போது குடிமக்களுடைய குறைகளை அமைச்சர் பெருமக்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும், அதே முறையில், சட்ட மன்றத்திலே ஒத்தி வைப்பு தீர்மானம் மூலமாகவோ அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாகவோ அல்லது மற்ற முறை களிலோ கொண்டு வருவதற்குமான உரிமை சட்டமன்ற உறுப் பினர்களுக்கு உண்டு. அவ்வாறு ஒரு உரிமையை சட்டமன்றத் திலே பயன் படுத்துவதுதான் ஜனநாயகத்தைப் பாதுகாப் பதற்குள்ள சிறந்த முறை என்று நாங்கள் கருதுகிறோம்.

இந்த முறையில் பாதிக்கப்பட்ட ஒரு ஊழியரின் பிரச் சினையில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் அமைச்சரைச் சந்திப்பதையே அந்தப் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு எதிரான குற்றச்சாட்டாக்கி வஞ்சம் தீர்க்கவே இந்த உத்தரவு வழி வகுக்கும். ஆகவே இது ஜனநாயகத்திற்குப் பாதக மானது ; சட்டமன்றத்தை மதிக்காதது ; சட்டமன்ற உறுப் பினர்களுடைய உரிமையைப் பறிப்பது என்ற முறையிலேதான் நான் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்புகிறேன்.

இதனால் இந்தச் சட்டமன்றத்திலே எங்களுடைய கடமை களை நாங்கள் செய்ய முடியாத நிலையும் ஏற்படக்கூடும். மின் சார ஊழியர்களும் இந்த நாட்டினுடைய குடிமக்கள்தான். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒரு மின்சார ஊழியர் குறிப்பிட்ட ஒரு பிரச்சினையை என்னிடம் கொண்டு வந்தால் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரைப் பார்த்து அது சம்பந்த மாகப் பேசுவதற்குள்ள உரிமை என்னுடைய அடிப்படை யான உரிமை. அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள லாம் அல்லது நிராகரிக்கலாம். நான் சொல்லியது ஆதார மற்றது என்று கூடச் சொல்லலாம். அப்படி அந்த அமைச்ச

1986 நவம்பர் 14] [திரு. வி. பி. சிந்தன்]

ரிடம் முறையிடுவதற்குரிய இந்த உரிமையைக் கூட மின் வாரியத் தலைவர் பறிக்க முயற்சிக்கிறார். அது மட்டுமல்ல; கேள்விகளை எழுப்புகிற நேரத்தில், மின் வாரிய ஊழியர்கள் சம்பந்தமாக நான் கேள்விகளை எழுப்பியது உண்டு. அவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட சர்க்குலர் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. வி. பி. சிந்தன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

இப்பிரச்சினை குறித்து மின் வாரியத் தலைவரிடமிருந்து விளக்கம் பெற்ற பின்பு நான் என்னுடைய தீர்ப்பை அளிக்க இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

4, அறிவிப்புகள்.

(அ) முதல் துணை மதிப்பீடுகள், 1986-87, அளித்தல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1986–87 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் திங்கட்கிழமையைக் குறித்திருக்கிறார்கள்.

(ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1980-81, அளித்தல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1980–81ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1986 ஆம்ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் திங்கட்கிழமையைக் குறித்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.